# சும்மா

(பொன் குலேந்திரன்- மிசிசாகா – கனடா).

என்னடா தம்பி
கனகாலம் காணோம்
கரியமாய்த் தானோ
நீ இப்ப வந்தநீ?

ஐயாவைக் காண
சும்மா நான் வந்தனான்
“சும்மா சுப்பரின்”
சூட்சுமமான பதில்.
சும்மா நீ வராமல்
கையில் ஒரு பையை
சுமந்து தானே வந்தனீ;
சோழியன் குடும்பி
சும்மா ஆடாதே?
என் பதில் கேட்டு
சும்மா இருந்த கதிரையில்
சிரித்துக் கொண்டமர்ந்தான்
“சும்மா” பத்திரிகையின்
பிரதம ஆசிரியர்.
சும்மா சுப்பர்.

நான் வந்தது
சும்மா வெளியிடும்
என் விளம்பரப் பத்திரிகையின்
உங்கள் கருத்தை
சும்மா கேட்டுப் போக
சும்மா இருந்தால்
கவிதை யொன்றும்
புனைந்து

சும்மா தாருங்கள்.
இது அவனின்
கோரிக்கை

சும்மா இருந்த நான்
சுப்பர் தந்த சும்மா
பத்திரிகையின் பக்கங்களை
சும்மா பார்த்தேன்.
அறுக்குளா ஆறு டொலார்
கறுவாடு நாலு டொலர்.
நண்டு கணவாய்
நல்ல மலிவு
முருங்கக் காய்
முப்பது காசு
மேசை கட்டில்
மலிவு விற்பனை
மறைந்தோர் நினைவாய்
முழுப்பக்க அஞ்சலி
பக்கத்துக்கு பக்கம்
பல வர்ண விளம்பரம்.
அடேயப்பா
தமிழுக்குத் தான்
என்ன பத்திரிகை சேவை

விசயங்கள் ஒன்றும்
விசேஷமாய் இல்லை
எல்லாப் பேப்பரிலும்
ஒரே மாதிரி
ஈயடிச்சான் செய்தி
கணனி வலையச்
செய்திகள் எல்லாம்
பத்திரிகையில் மறுபதிப்பு

ஆராச்சிக் கட்டுரைகள்
அரிது அரிது
வரலாற்றுக் கட்டுரை
வந்ததாக யில்லை
தொழில் நுட்ப கட்டுரை
ஏன் அந்த தொல்லை
இலக்கியக் கட்டுரைகள்
இருப்பதைக் காணோம்.

சிம்ரானின் சிங்காரமும்
ஜோதிக்காவின் ஜொலிப்பும்
மாதவனின்
நேர் காணலும்
அதோடு கூட
கிசு கிசு கிசுப்பும்
பத்திரிகையின் தமிழ்
இலக்கிய சேவையை
நினைத்து
என் மனம் அழுதது.

ஏண்டா தம்பி
கட்டுரை ஒன்றுக்கு
வெகுமதியாக
எவ்வளவு கொடுப்பாய்;?
என் கேள்விக் கணையால்
அவன் திகைத்துப் போனான்.
ஐயோ ஐயா
உங்கள் பெயர்
பேப்பரில் வந்தால்
விளம்பரம் உங்களுக்கு
அது தான் நான் தரும்
பெரிய வெகுமதி

உன் சும்மா பத்திரிகையில்
விளம்பரங்கள் எல்லாம்
சும்மா தான் போடுவியோ ?
நக்கலுடன் கேட்டேன்
நழுவினான் சுப்பர்.
சும்மா வந்தவன்
ஒன்றும் கிடைக்காமல்
சும்மா போனான்.

எப்ப மறையும்
சும்மா கிடைக்கும்
பத்திரிகை கலாச்சாரம்?
ஊரில் தான் கூப்பனுக்கு
அரிசி என்றால்
இங்கேயும் இறக்குமதி
அந்தக் கலாச்சாரம்.
அறிவுக்கா பத்திரிகை?
அல்லது
அவித்த மா காயவா பத்திரிகை?
என் மனம் அவிந்தது
சும்மா சிந்தித்தது
பின் சும்மா வந்தது
மனதில் இக் கவிதை

******